(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்

விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை



5 சைவசமய பாடப்பரீட்சை : 2020

தரம் ஐந்து

nselva.com

காலம் அளவு	1.00 மணி

புள்ளிகள் : 100

இல.
மாணவர் சுட்டெண்:

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.

1. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக

1. அப்பர் சுவாமிகள் பாண்டியனின் வெப்பு நோயை தீர்த்தார். ( )
2. விபூதி, உருத்திராக்கம் என்பன சிவசின்னங்களாகும். ( )
3. ஆலயம் என்பது ஆன்மா லயப்படும் இடமாகும். ( )
4. நாயன்மார்களின் தொகை அறுபத்து ஐந்து ஆகும். ( )
5. பூசலார் சமய குரவர்களில் ஒருவராவார். ( )

(5X1= 5 புள்ளிகள்**)**

2. மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக

1. நகுலம் என்பது
   1. யானை 2. நந்தி 3. கீரி 4. நத்தை
2. முன்னேஸ்வர ஆலயத்திலுள்ள இறைவியின் நாமம்
   1. கௌரி அம்பாள் 2. வடிவாம்பிகை
   3. மாதுமை அம்பாள் 4. மூகாம்பிகை
3. ‘‘ஆர் ஆர் வந்தார் அமரர்” என்ற பதிகத்தைப் பாடியவர்.
   1. சேக்கிழார் 2. சேந்தனார் 3. திருமூலர் 4. சுந்தரர்
4. மாசிமாதம் விசேடமாக சிவனுக்கு அனுஷ்டிக்கும் விரதம்
   1. பிரதோசம் 2. சிவராத்திரி 3. திருவாதிரை 4. ஏகாதசி விரதம்
5. தேவார முதலிகளுள் அடங்காதவர்
   1. ஆளுடைய பிள்ளை 2. அப்பர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

(5X1= 5 புள்ளிகள்**)**

3. பின்வரும் சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

திருஞானசம்பந்தர்	தைப்பொங்கல்	தீபாவளி	சுந்தரர்	அருணகிரிநாதர்	சேக்கிழார்.

1. ஸ்ரீகிருஷ்ணர் நரகாசுரனை வதம் செய்த நிகழ்வுடன் தொடர்புடைய பண்டிகை .....
2. ..... உமையிடம் ஞானப்பால் உண்டார்.
3. ''பித்தாபிறை சூடி'' என்ற திருப்பாடலை ..... பாடினார்
4. ..... திருப்புகழ் பாடினார்.
5. சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காக ..... கொண்டாடப்படுகிறது.

(5X1= 5 புள்ளிகள்**)**

4. "அ" பகுதிக்குப் பொருத்தமானவற்றை "ஆ" பகுதியிலிருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.

"அ"		"ஆ"
1. திருச்செந்தூர்	( )	1. நம்பியாண்டார்
2. மாசில் வீணையும்	( )	2. தான்தோன்றீஸ்வரம்
3. திருமுறைகள்	( )	3. திருஞானசம்பந்தர்
4. கொக்கட்டிச்சோலை	( )	4. குமரகுருபரர்
5. சீர்காழி	( )	5. திருநாவுக்கரசர்

(5X2= 10 புள்ளிகள்**)**

5. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மகேஸ்வர பூசை என்றால் என்ன?

   .....

2. ஒருவன் எப்போது ''சைவசமயி'' ஆகிறான்?

   .....

3. ''நீறில்லா நெற்றிபாழ்'' என்று கூறியவர் யார்?

   .....

4. மலையத்துவ மன்னன் சிவபெருமானை நோக்கி எதற்காக யாகம் செய்தான்?

   .....

5. மருத்து நீர் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மூன்று பொருட்கள் தருக.

   .....

6. பூசலார் மனக்கோவில் கட்டிய அதேவேளை, காஞ்சியில் சிவனுக்கு கோயிலைக் கட்டிய மன்னன் யார்?

   .....

7. கச்சியப்பர் எழுதிய பாடல்களை திருத்தங்கள் செய்தவர் யார்?

   .....

8. அப்பர் சுவாமிகளை கல்லுடன் கட்டி கடலில் பாச்சிய போது எந்த மந்திரத்தைச் சொல்லி துதித்தார்.

.....

9. வியாச முனிவரால் புராணக்கதைகளைச் சுலோக வடிவிலே பாட ஏன் முடியாமல் போனது?

.....

10. இறைவன் ஐந்தொழில்களை புரிவதற்கான காரணம் யாது?

.....

11. மாரி நீங்கி கோடை பிறப்பதை உணர்த்தும் பண்டிகையை தருக.

.....

12. கங்கை நதியின் கரையில் உள்ள முக்தி தலம் எது?

.....

13. நவராத்திரி தினத்தின் இறுதி நாள் எவ்வாறு அழைக்கப்படும்?

.....

14. விதைத்த நெல்லையெடுத்து அமுதாக்கி அடியாருக்கு உணவு படைத்த சிவனடியார் யார்?

.....

15. கண்ணனின் நெருங்கிய நண்பர் யார்?

.....

(15X2= 30 புள்ளிகள்**)**

6. பின்வருவனபற்றி ஐவைந்து வாக்கியங்கள் எழுதுக.

முன்னேஸ்வரம்

1. .....
2. .....
3. .....
4. .....
5. .....

(5x2=10 புள்ளிகள்**)**

மாணிக்க வாசகர்

1. .....
2. .....
3. .....
4. .....
5. .....

(5x2=10 புள்ளிகள்**)**

7. பின்வரும் தொடக்கத்தையுடைய திருக்குறள்களை எழுதுக.

1. நிறைமொழி .....
   .....
2. அழுக்காறு அவா .....
   .....
3. வான் நின்று .....
   .....
4. இருள் சேர் .....
   .....
5. பிறவிப் பெருங்கடல் .....
   .....

(5X1= 5 புள்ளிகள்**)**

8. பின்வரும் திருப்பாடல்களுள் எவையேனும் இரண்டை வரிக்கிரமமாக எழுதுக.

1. "பிடியதன் உரு .....” 2. "சிவனடியே சிந்திக்கும் .....”
3. "கற்றவர் விழுங்கும் .....” 4. "பால் நினைந்து.....”

1. .....
   .....
   .....
   .....

2. .....
   .....
   .....
   .....

(10 x 2 = 20 புள்ளிகள்**)**